31 மார்ச் 2022 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான 'மின்னணு கொள்முதல் முறையின் அமலாக்கம்' மீதான செயலாக்கத் தணிக்கை குறித்த இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கை அறிக்கை (**2023 ஆம் ஆண்டின் அறிக்கை எண் 4**) - 29.06.2024 அன்று மாநில சட்டப்பேரவையில் ஒப்படைக்கப்பட்டது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள் பின்வருமாறு:

## தமிழ்நாட்டில் மின்னணு கொள்முதல் முறையின் அமலாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை

மின்னணு கொள்முதல் முறையின் அமலாக்கம் (Implementation of eProcurement System) மீதான செயலாக்கத் தணிக்கை, மின்னணு கொள்முதல் இணையதளத்தின் (portal) செயலாக்கம், பயன்பாட்டு மென்பொருள் (application software), ஒப்பந்த வழங்கல் செயல்முறை ஆகியவற்றில் இருந்த குறைபாடுகளையும், கூட்டு ஏல முறை (collusive bidding) மற்றும் முறையற்ற வணிக கூட்டமைப்பு (cartelisation) நேர்வுகளையும் வெளிப்படுத்தியது.

மின்னணு கொள்முதல் இணையதளத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவோ அல்லது கண்காணிக்கவோ,'பொறுப்பு மையம்' ('Centre of responsibility') ஏதும் இருக்கவில்லை.

**(பத்தி 2.1)**

மாநிலத்தில் உள்ள அனைத்து கொள்முதல் நிறுவனங்களும் (procuring entities), பொருட்கள் மற்றும் சேவைகளை, மின்னணு கொள்முதல் இணையதளத்தின் மூலம் மட்டுமே கொள்முதல் செய்யவேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவில்லை. குறிப்பிட்ட அரசு அறிவுறுத்தல்கள் இல்லாததால், இந்த இணையதளம் தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்தும், 74 விழுக்காடு கொள்முதல் நிறுவனங்கள் அதனைப் பயன்படுத்தாமலேயே செயல்பட்டன.

**(பத்தி 2.2)**

மின்னணு கொள்முதல் இணையதளத்தில் டெண்டர் மதிப்பீடு அறிக்கைகளை (tender evaluation reports) பதிவேற்றம் செய்ய தவறியது, இவ்வமைப்பை முழுமையற்ற ஒன்றாக மாற்றுவதோடு மட்டுமின்றி, டெண்டர் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையையும் (transparency), நடுநிலைத்தன்மையையும் (objectivity) பாதித்தது. மேலும், கைமுறையான பதிவுகளையே (manual records) தொடர்ந்து சார்ந்திருக்கச் செய்கிறது.

**(பத்தி 2.3)**

தோல்வியுற்ற ஏலதாரர்களுக்கு அவர்கள் அளித்த EMDயை உடனுக்குடன் திருப்பிச் செலுத்தும் நோக்கத்துடன், இணையவழி EMD வசூல் முறை டிசம்பர் 2017ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், வரையோலைகள், காசோலைகள் போன்ற பிற வழிகளில் EMDகள் நேரடியாக (offline mode) வசூலிக்கப்படுவதும், தோல்வியுற்ற ஏலதாரர்களுக்கு EMDயை திருப்பி செலுத்துவதில் கால தாமதமும் தொடர்ந்து கொண்டிருந்தது.

**(பத்தி 2.5)**

மின்னணு கொள்முதல் இணையதளம் குறித்து ஒப்பந்ததாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் அதில் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிக்கவும் இத்தளத்தினை நிர்வகிக்கும் நிதித்துறையோ அல்லது பயனர் துறைகளோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

**(பத்தி 2.6)**

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000(Tamil Nadu Transparency in Tender Rules - TNTIT விதிகள்)ல் பரிந்துரைக்கப்பட்ட காலவரம்புகளை துறைகள் பின்பற்றவில்லை. காலவரம்புகள் தொடர்பான TNTIT விதிகள் (timeline related provisions) இணைக்கப்படாமல் மென்பொருள் வடிவமைக்கப்பட்டிருந்தது.

**(பத்தி 3.2.1)**

பொருட்களுக்கான அளவுப் பட்டியல் (Bill of Quantities - BoQ) வரைந்தெடுக்கப்பட்ட பிறகு L1 ஏலதாரருடன் விலைகுறைப்பிற்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், பங்கு பெற்ற ஏலதாரர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டோர் அதே விலையை மேற்கோள் காட்டிய நேர்வுகளில் L1ஐ தேர்வு செய்யவும் தேவையான வழிமுறைகள் இவ்வமைப்பில் இல்லாதிருந்தது.

**(பத்தி 3.2.6)**

EMD மற்றும் டெண்டர் மதிப்புகளுக்கு 'பூஜ்ஜியம் அல்லாத' (‘non-zero’) மதிப்புகள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் என்பது மின்னணு கொள்முதல் இணையதளத்தில் உறுதி செய்யப்படவில்லை. இதன் விளைவாக, வெளியிடப்பட்ட டெண்டர்களில் 10 விழுக்காடு டெண்டர்கள், EMD அல்லது டெண்டர் மதிப்பை பூஜ்ஜியம் எனக் கொண்டிருந்தன. அமைப்பில் உள்ளீட்டு கட்டுப்பாடுகள் இல்லாததால், கட்டாயப் புலங்களில் (mandatory fields) முரண்பாடுகளும் மற்றும் பெயர் புலங்களில் NULL மதிப்புகளும் இருந்தன.

**(பத்திகள் 3.3.1 (i) மற்றும் 3.3.2)**

ஒரே ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள், TNTIT விதிகளுக்கு முரணாக வெவ்வேறு தேதிகளில் மறைகுறியாக்கம் (decrypt) செய்யப்பட்டன. மீள் கொள்முதல் இனங்களின் (buy-back cases), அதாவது, விற்கப்பட்ட பொருட்களை வழங்குநர்களே திரும்ப வாங்கும் நேர்வுகளின் (buy-back) அளவுப் பட்டியல் ஒப்பீட்டு விளக்கப்படத்தில் (Bill of Quantities comparative chart) மேற்கோள் காட்டப்பட்ட தொகையிலிருந்து (quoted amount) மீள்வாங்குதலுக்கான விலையை (buy-back amount) கழிப்பதற்குப் பதிலாக கூட்டிக் காட்டியது. இது, மூன்று நேர்வுகளில் கண்டறியப்பட்டது.

**(பத்தி 3.3.3 மற்றும் 3.3.4)**

பயனர்களுக்கான பொறுப்புக்களை (role creation) துறை வழங்குவதில் முரண்பாடுகள் காணப்பட்டன. பயனர் துறைகளால் பல ஒருங்கிணைப்பு அதிகாரிகள் (Nodal officers) உருவாக்கப்பட்டனர். மேலும், டெண்டரில் தடைசெய்யப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களும் துறை சார்ந்த பயனர்களும், தடை விதிக்கப்பட்ட காலத்தில் டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்றனர். இது போன்ற நேர்வுகள் செயல்முறையில் கட்டுப்பாடுகள் இல்லாததை குறித்தது.

**(பத்திகள் 3.3.8 மற்றும் 3.3.9)**

ஏல ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும், குறிப்பிட்ட நேரத்திற்குள் விடுபட்ட ஏல ஆவணங்களைக் (missing bid documents) கோருவதற்குமான வழிவகைகள் மின்னணு கொள்முதல் இணையதளத்தில் இருந்த போதிலும், பயனர் துறைகள் அவற்றை பயன்படுத்தவில்லை. மாறாக, கைமுறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையே சார்ந்து இருந்தனர். இது, டெண்டர் செயல்முறையில் வெளிப்படைத் தன்மையை பாதித்தது.

**(பத்தி 4.2)**

பொருட்களின் அளவுப் பட்டியலுக்கான (Bill of Quantities - BoQ) டெம்ப்ளேட் வடிவமைப்பில் இருந்த குறைபாடுகள், ஏல நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யாமல் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் உள்ள முரண்பாடுகள் ஆகியவை, தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கு (legitimate bidders) ஒப்பந்தம் வழங்கப்படுதலைத் தடுப்பதோடு, டெண்டர் மதிப்பீட்டு செயல்முறையில் நடுநிலைத்தன்மையையும் (objectivity) பாதித்தது.

**(பத்தி 4.3)**

ஏல சுழற்சி (bid rotation), குடும்ப உறுப்பினர்களே வெவ்வேறு ஏலதாரர்களாக பங்கேற்றல் (bidders with family relationship), கொள்முதல் நிறுவனத்தின் கணினிகளில் இருந்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல், வெவ்வேறு ஏலதாரர்கள் ஒரே IP முகவரியில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்தல், இரட்டை EMD, ஏலதாரர்கள் வழங்கிய குறிப்புத் தகவல்கள் (coded intimation by bidders), ஒப்பந்த முறைகேட்டைக் குறிக்கும் தொடர்ச்சியான EMD ஆவண எண்கள் மற்றும் முறையற்ற வணிக கூட்டமைப்பு (cartelisation) போன்ற முறைகேடான ஏல முறைகள் (patterns of bidding) கண்டறியப்பட்டன. ஏலதாரர்களிடையே இருந்த இதுபோன்ற மோசடியான நடைமுறைகளாலும், டெண்டர் செயல்முறையில் (evaluation and approval) அதிகாரிகளின் தோல்விகளாலும் அரசின் முயற்சிகளான ஏலதாரர் பங்கேற்பை அதிகரித்தல், செலவைக் குறைத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் கொள்முதல் முறையை மேம்படுத்தல் போன்றவை பாதிக்கப்பட்டன.

**(பத்தி 5.3, 5.4 மற்றும் 5.6)**